# ஞாபகார்த்த ராப்போஜனம்

1. நம்முடைய கர்த்தருடைய மரணத்தின் வருடாந்தர கொண்டாட்டத்தை அனுசரிப்பதில் நாம் ஞாபகப்படுத்துகிற காரியங்கள் எவ்வளவு புனிதமானவைகளாக இருக்கின்றன! நம்முடைய கர்த்தருடைய மரணத்தின் ஞாபகார்த்தம் முதலாவது இரட்சிப்பின் முழு ஏற்பாட்டிலும் காண்பிக்கப்பட்டிருக்கிற யஹோவா தேவனுடைய அன்பை ஞாபகப்படுத்துகிறது. அவருடைய பிரிய குமாரனை இரட்சகராக நமக்குக் கொடுத்ததே இந்த ஏற்பாட்டின் மையமாகும். இரண்டாவது அது தன்னையே எல்லாருக்காகவும் சமமான கிரயமாக, மீட்கும் பொருளாகக் கொடுத்த இயேசுவை விசேஷமாக நம்முடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது. அப்பொழுது அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாடுபட்ட அவரிடம் விசுவாசத்தோடு நாம் இன்னமும் சமீபத்திற்கு வருகிறோம். நன்றி வழிந்தோடும் இருதயத்தோடும், கண்ணீர் நிறைந்த கண்களோடும், நாம், என் இரட்சகரே, என் மீட்பரே, என் கர்த்தரே, என் எஜமானே! நீர் என்னை நேசித்தீர், எனக்காக உம்மையே கொடுத்தீரே என்று தாழ்ந்த குரலில் அறிக்கை செய்கிறோம்.

2. நாம் அவரை நினைவுகூர வேண்டுமென்றும், அவர் நம்முடையவர் என்று உரிமை பாராட்டி நாம் அவரை அழைக்க வேண்டுமென்றும் இயேசு கரிசனையாய் எதிர்நோக்குகிறார் என்கிற எண்ணம் எவ்வளவு பாக்கியமுள்ளதாயிருக்கிறது! அவர், எல்லா தூதர்களுக்கும் மேலாயிருக்கிறார், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை உடையவராயிருக்கிறார், பிதாவுக்கு அடுத்தபடியாக இருக்கிறார். (1கொரி 15:27,28) ஆம் அவ்வளவு பெரியவராய் அவர் இருக்கிறார். ஆகையால் அப்படிப்பட்டவருடைய சிநேகத்திற்கு நாம் எவ்வளவாய் அற்பராயிருக்கிறோம், எவ்வளவாய் அபூரணராயிருக்கிறோம், எவ்வளவாய் தகுதியற்றவர்களாயிருக்கிறோம் அல்லவா, இருப்பினும், நம்மை சகோதரரென்று அழைக்க அவர் வெட்கப்படவில்லை என்றும், அவருடைய மரணத்தை நாம் நினைவுகூர அவர் இஷ்டப்படுகிறார் என்றும், அவர் தன்னுடைய பிட்கப்பட்ட சரீரத்தை அடையாளமாக காட்டுகிற அப்பத்திலும், தன்னுடைய சிந்தப்பட்ட இரத்தத்தை அடையாளாமாக காட்டுகிற திராட்சைப்பழ ரசத்திலும் நாம் பங்கு கொள்வதற்காக அவைகளை நமக்குக் கொடுத்தார் என்றும் எண்ணுவது எவ்வளவு ஆசீர்வாதமுள்ளதாயிருக்கிறது! அப்பம் நமக்காகவும் எல்லாரையும் கிரயமாகக் கொள்ள அவர் கொடுத்த

மானிட சுபாவத்தை அடையாளமாக காட்டுகிறது. திராட்சைப்பழ ரசம் ஜீவனுக்குரிய உரிமையையும் ஜீவாதார உரிமையையும் கொண்ட அவருடைய மானிட ஜீவனை அடையாளமாக காட்டுகிறது. இதை நம்புகிற எல்லாருக்கும் இது நித்திய ஜீவனை உத்திரவாதமளிக்கிறது.

3. கர்த்தராகிய இயேசுவும், யூதரும் செய்ததுபோல நாட்களையும் மணிகளையும் கணக்கிட்டு அதனை அனுசரிப்பது எவ்வளவு மகிழ்ச்சி தருவதாயிருக்கிறது! இயேசு தமது கடைசி வேளை வந்தபோது, பஸ்கா ஆட்டுக்குட்டியின் மரணத்தைக் கொண்டாட தமது சீஷர்களோடு உட்கார்ந்தார். அந்த அனுசரிப்பின் மூலம் எகிப்தின்மேல் வந்த அந்த மகா அழிவிலிருந்து இஸ்ரவேலின் முதற்பேறானவர்கள் விடுதலையடைந்ததையும், விடுதலையடைந்த அந்த முதற்பேறானார்வர்கள் மூலமாக தேவனுடைய எல்லா இஸ்ரவேலரும் விடுதலையடைந்தடையும் நினைவுகூறவும் அவர் அப்படி செய்தார். ஞாபகார்த்தமாகக் கொண்டாடப்பட்ட அந்த அடையாளத்திற்கு அப்பால் நோக்கிப் பார்க்கவும், எஜமான் புது அடையாள சின்னங்களை எடுக்கும் போது, “என்னை நினைவுக்கூரும்படி இதைச் (இனிமேல் நிறைவேருதலான பஸ்கா ஆட்டுக்குட்டியின் ஞாபகார்த்தத்தின் கொண்டாட்டத்தை) செய்யுங்கள்” என்று அவர் சொன்னதைக் கேட்கவும் எவ்வளவு அருமையாக இருக்கிறது!

4. ஆம்! சிலுவையில் அறையுண்ட அவரில், “உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி”யை இப்பொழுது நாம் பார்க்கிறோம். “நம்முடைய பஸ்காவாகிய (ஆட்டுக்குட்டி) கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்”. ஏனென்றால் நாம் இதைச் செய்யும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் (அவருடைய ராஜ்ஜியம் வருமளவும்) அவருடைய மரணத்தை தெரிவிக்கிறோம். அவருடைய ராஜ்ஜியம் வந்த பிறகு ராஜ்ஜியத்தில் திராட்சைப்பழ ரசத்தை நவமானதாய் (புதிய ஜீவனையும் சந்தோஷத்தையும்) அவரோடே பானம் பண்ண நாம் அனுமதிக்கப்படுவோம் (1கொரி 5:7,8; 11:23-26; மத் 26:29).

5. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலும், இழந்து போனதைத் திரும்பப்பெறும் உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பெறுதலும், நமது கர்த்தருடைய புண்ணியத்தின் பலனாகக் கிடைக்கிற அனுகூலங்களாகும், சிறுமந்தை வகுப்பார், நமது கர்த்தருடைய பலியினால் கிடைக்கிற இந்த தயவை

அனுபவிக்கும் சிலாக்கியத்தை பெற்றிருந்ததுமில்லாமல் அதைவிட மேலாக, ஏஜமானோடு பலியிலும் அதன் மகிமையான பலனிலும் பங்கு கொள்ளவும் அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அழைப்பு இதுவே யாராகிலும் என்னுடைய வேளையிலும் அதன் விளைவுகளிலும் அனுதாபம் கொண்டிருந்தால், அதாவது, யாராகிலும் என் ராஜ்ஜியத்தில் பங்கு கொள்ளவும், உலகை ஆசீர்வதிக்கும் அதன் வேளையில் என்னோடு சேரவும் விரும்பினால், அவனும் என் பாவநிவாரணபலியின் ஒரு பாகமாக என்னோடு பிட்கப்படவும் மரணபரியந்தம் சுயவெறுப்பின் பாத்திரத்தில் பானம் பண்ணவும் என்னோடு ஒன்று சேரக்கடவன் என்பதாகும். ஆகவேதான், "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" என்றார். அப்போஸ்தலன் பின்வருமாறு சொல்லி அந்தக் கருத்தை உறுதி பண்ணுகிறார். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் (மரணத்தின்) ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? (சம உரிமையுள்ள ஒற்றுமை). அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லோரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் (கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள்) ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1கொரி 10:16,17).

6. வெவ்வேறு வேதவாக்கியங்களிலிருந்து "சிறு மந்தையின் கடைசி அங்கம்" திரைக்கப்பால் கடந்து சென்றதுடன் நிறைவேறுதலான ஒப்புரவாகுதலின் நாளுக்குரிய பாவநிவாரண பலி முடிவடைவதை அறிகிறோம். அதாவது முழுவதுமாக கர்த்தருடைய ஆடு தகனிக்கப்பட்டுவிட்டது என்று அறிகிறோம். தேவனுடைய ஏற்பாட்டின் இந்த முக்கியமான அம்சம் முடிவடைந்ததைக் குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம் (வெளி 19:6-9). ஆகையால், கிறிஸ்துவோடு அவருடைய சரீரத்தின் ஒரு அங்கமாக பங்கு கொள்வதற்கும் அவருடைய பாவநிவாரண பலியில் அவரோடு பங்குகொள்வதற்கும் உண்மையான ஒரு அடையாளமாக, ஞாபகார்த்த ராப்போஜனத்தில் அப்பம் புசிப்பதற்கும் பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கும் இனி சாத்தியமில்லை. ஏனென்றால், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக மாம்சத்தில் நிறைவேற்றுவது (பூர்த்தி செய்வது) எல்லாம் முடிந்துவிட்டது (கொலோ 1:24).

7. இருந்தாலும் கர்த்தருக்கென்று பிரதிஷ்டை பண்ணியிருக்கிற மற்ற அநேக ஊழியக்காரர் இன்னமும் இவ்வுலகில் இருக்கிறார்கள் (வெளி 19:5,6; 11:18). வாலிபராகிய விசுவாசிகளாகளோ (Youthful Worthies) அல்லது பிரதிஷ்டை செய்திருக்கிற எப்பிபெனி பாளையத்தாராகவோ, (Consecrated Epiphany Campers) அவர்களும் தனக்கும் உலகத்துக்கும் செத்து, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம் என்று அவர்கள் செய்திருக்கிற தங்களுடைய உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளுவதற்கு, கர்த்தருடைய இந்த ஞாபகார்த்த சமயத்தை விட மேலான ஒரு தகுந்த சமயம் வேறெதுவுமில்லை. பிரதிஷ்டை செய்திருக்கிற இந்த இரு வகுப்பாரும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக அவருடைய பலியின் பாத்திரத்தில் பங்கு கொள்ளவும், பாவ நிவாரண பலியில் பங்கு கொள்ளவும், சிலாக்கியம் பெறவில்லை. எனினும் அவர்கள் அவருக்காகவும் அவர் நிமித்தமாகவும் பாடுகள் அனுபவிக்கவும், அவருடைய ஊழியத்தில் மரணபரியந்தம் உண்மையாயிருக்கவும் நிச்சயமாகச் சிலாக்கியம் பெற்றிருக்கிறார்க்கள்.

8. வாலிபராகிய விசுவாசிகள் தேவ ஆட்டுக்குட்டியான அவருடைய மரணத்தை அடையாளத்தினால் தெரிவிக்கவும், தங்களுடைய விசுவாசத்தினால் அவருடைய மரணத்தின் மூலமாக நீதிமானாகப்படுதலை தற்காலிகமாகச் சொந்தமாக்கிக் கொள்ளுவதை அடையாளத்தினால் தெரிவிக்கவும், அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொள்ளுகிறார்கள். வாலிபராகிய விசுவாசிகள் கர்த்தருடைய ராப்போஜனத்தில் பங்கு கொள்ளுவது தகுந்ததென்று நம்புவதற்கு நமக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. (1) முதற்பேறானவர்கள் மாத்திரமல்ல, எல்லா இஸ்ரவேலரும் எகிப்திலும், வனாந்திரத்திலும் தெய்வீக கட்டளையாலும் அனுமதியாலும் பஸ்காவில் பங்கு கொண்டார்கள் (யாத் 12:27; 9:1-5; யோசு 5:10; 2நாளா 35:6,11,13,17-19), ஆகவே எல்லா கடைசியான விசுவாசிகளும் கர்த்தருடைய ராப்போஜனத்தைக் கொண்டாடலாம்; (2) கர்த்தருடைய முதல் ராப்போஜனத்தில் பங்கு கொண்ட அப்போஸ்தலர், பிரதிஷ்டை பண்ணியிருந்தாலும், அவர்கள் தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் தான் இருந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்களுடைய நிலைமை வாலிபராகிய விசுவாசிகளின் நிலைமைக்கு ஒத்ததாயிருந்தது. இருந்தாலும், அப்போஸ்தலருக்கு கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாவதற்குரிய எதிர்கால வாய்ப்பு இருந்தது. ஆனால் வாலிபராகிய விசுவாசிகளுக்கு அந்த வாய்ப்பில்லை. இவ்விதமாக, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள் மாத்திரமே எப்பொழுதும் ஞாபகார்த்தத்தில் பங்கு கொள்ள

வேண்டும் என்று போதிக்கிறவர்கள் ஆபத்தான தப்பிதங்களில் (தப்பான உபதேசங்களில்) இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

9. இந்த ஒற்றுமையில், ராப்போஜனத்தை அனுசரித்தல் பிரதிஷ்டை செய்திருக்கிற எப்பிபெனி பாளையத்தாருக்கும் உரியது என்று தீர்மானிக்கிறோம். பிரதிஷ்டை பண்ணியிருக்கிற எப்பிபெனி பாளையத்தார் நிறைவேறுதலான முதற்பேறானவர்களாகவோ லேவியராகவோ இல்லாவிட்டாலும் கூட அவர்கள் நிறைவேறுதலான இஸ்ரவேலராயிருக்கிரார்கள். ஆகையால் அவர்கள் பரிசுத்த பெரும் பாதை திறக்கப்படும் முன் "கடைசியான விசுவாசிகளாயிருக்கிறார்கள்". அதன் பலனாக தெய்வீக கட்டளையாலும், அனுமதியாலும், தேவ ஆட்டுக்குட்டியான அவருடைய மரணத்தை அடையாளத்தினால் தெரிவிக்கவும், தங்களுடைய விசுவாசம் அவருடைய மரணத்தின் மூலமாக நீதிமானாக்கப்படுதலை தற்காலிகமாக சொந்தமாக்கிக் கொள்ளுவதை அடையாளத்தினால் தெரிவிக்கவும், அவர்களும்கூட கர்த்தருடைய ராப்போஜனத்தில் பங்கு கொள்ள வேண்டும்.

## பிரதிஷ்டை பண்ணியிருக்கிற எல்லோரும் ஞாபகார்த்தத்தைக் கொண்டாட வேண்டும்.

10. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடு அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே கர்த்தருடையவர்களாகிய பிரதிஷ்டை பண்ணியிருக்கிற எல்லோரும் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். புளித்தமாவு பாவத்திற்கு அடையாளம், துர்க்குணம், தீய எண்ணம், வெறுப்பு இவைகளை கொண்ட இருதயம் அநீதியான நிலைமையை குறிக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் புறம்பே தள்ளிவைக்க வேண்டும். ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்துப்பார்த்து கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருக்க கவனித்து கொள்ள வேண்டும். "மாம்சத்திலும் ஆவியிலும் (மனதிலும்) உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு பரிசுத்தமாக்குதலைத் தேவ பயத்தோடே பூரனப்படுத்தக்கடவோம்" (2கொரி 7:1) "கர்த்தருடைய பாத்திரங்களை (சத்தியங்களையும், போதனைகளையும்) சுமக்கிறவர்களே, உங்களைச் சுத்திகரியுங்கள்" (ஏசா 52:11). கல்வாரியில் நமக்காகக் கர்த்தர் செலுத்திய

ஈடுபலியிலிருந்து மகிமையாக வழிந்தோடுகிற சந்தோஷமும், ஆசீர்வாதமும் கொண்ட பாத்திரத்தில் கிறிஸ்துவும் அவருடைய மிகவும் மதிப்புள்ள மணவாட்டியோடு நாமும் திராட்சைப்பழ ரசத்தை நவமானதாய் பானம் பண்ணயிருக்கிறோம். அவருடைய ராஜ்ஜியத்தில் ஏதேனுமொரு ஸ்தானத்தில் இருந்து அதனை பானம் பண்ணப்போகிற அச்சமயத்தை மிகுந்த சந்தோஷத்தோடு நாம் எதிர்நோக்கியிருக்கிறோம். ஆதலால் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேறப் பிராயாசப்பட்டுக் கொண்டு, இன்னும் அதிகமாக உண்மையுடன் அதை நிறைவேற்ற வாக்குக் கொடுப்போமாக (மத். 26:29).

11. தேவனுடைய பிரபஞ்சத்தின் சரித்திரத்தில் மிகவும் கவனிக்க வேண்டிய இந்த சம்பவத்தை இவ்வாண்டு வரும் பஸ்கா பண்டிகையை குறித்த தேதியில் மாலை 6 மணிக்குப் பிறகு சிறு குழுக்களாக ஒன்று சேர்ந்து ஆண்டுவிழாவாகக் கொண்டாட, சத்தியத்தில் பிரகாசிப்பிக்கப்பட கர்த்தருடைய ஜனங்களை, மேலே கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைகள் வற்புறுத்துகின்றன. மற்ற கிறிஸ்தவர்கள் சந்தேகமில்லாமல் இந்த மிகவும் முக்கியமான சம்பவத்தைத் தவறான தேதியில் வழக்கம் போல கொண்டாடுவார்கள். நாம் அவர்களை கடுமையாக கண்டிக்கக்கூடாது. ஏனென்றால், நாம் அந்தச் சம்பவத்தைத்தான் முக்கியப்படுத்துகிறோம் என்பதை ஞாபகத்தில் வைப்போமாக. இருப்பினும், சரியாக வருடாந்தர நாள் மிகவும் விரும்பத் தகுந்ததாயிருக்கிறது. (சிலர் தனிமையாக இயசுவோடு இதைக் கொண்டாடலாம்).

12. கல்வாரியில் முடிவடைந்த அந்த ஈடானபலியில் நம்பிக்கை வைத்திருக்கிற எல்லாரும் இந்த வருடாந்தர கொண்டாட்டத்தில் பங்குபெற அழைக்கப்படுகிறார்கள். தெய்வீக ஆசீர்வாதம் அவர்களின் ஆயத்தத்திலும், பங்கு கொள்ளுவதிலும், அதற்குப் பிறகு ஏற்படுகிற அனுபவங்களிலும் இருப்பதற்காக, எங்குமுள்ள தேவனுடைய எல்லா இஸ்ரவேலருக்காகவும் நாங்கள் எங்கள் ஜெபங்களை ஏறெடுக்கிறோம்.

PT 446.